# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1538 - 2008 පෙබරවාරි 22 වැනි සිකුරාදා - 2008.02.22

*1538 ஆம் இலக்கம் – 2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | *178* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *180* |


***கவனிக்க*** .– (i) இலங்கை நூலக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2007, திசெம்பர் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) ஸ்ரீ தம்மாலங்கார சமூக சேவைகள் மன்றம் – (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2007, நவெம்பர் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) பண்டாரகம விக்கிரமசீலா தர்மாயதன சமூகசேவைகள் மன்றம் – (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2007, நவெம்பர் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும். வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, பெப்புருவரி 29 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, பெப்புருவரி 15 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்துப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2008, மாச்சு மாதம் 18 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2008, சனவரி 30.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. பதுளை | மஹியங்கனை | மஹியங்கனை நகர பிரிவு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , பதுளை |
| 2. பதுளை | பசறை | பசறை நகர பிரிவு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , பதுளை |
| 3. பதுளை | கல்தமுல்ல | கந்தப்பளை பிரிவு பிறப்பு, இறப்பு மற்றும் கப்புத்தளை பிரிவு விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , பதுளை |

2-652

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2008, மாச்சு மாதம் 18 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2008, சனவரி 25.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. பதுளை | ஹல்தமுல்ல | ஹல்தமுல்ல பிரிவு முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , பதுளை |
| 2. பதுளை | ஹாலிஎல | ஹாலிஎல பிரிவு முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , பதுளை |
| 3. பதுளை | ஹாலிஎல | ஹாலிஎல பிரதேச மேலதிக முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , பதுளை |

2-653

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இளைஞர் அலுவல்கள் அமைச்சு

*சிறு வியாபார முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவு*

### முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைநிலைப் பரீட்சை - 2007

இளைஞர் அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கிவரும் சிறு வியாபார முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவில் சேவையாற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி அலுவலர்களின் முதலாவது வினைத்திறன் காண் தடைநிலைப் பரீட்சை ஒன்று இவ்வமைச்சின் பொருட்டு, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும். பின்வரும் அறிவித்தலுக்கமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பரீட்சை ஒழுங்கு.**- (அ) இப்பரீட்சை நான்கு வினாத்தாள்களை உள்ளடக்குவதுடன், ஒவ்வொரு வினாத்தாள்களுக்குமான விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(ஆ) ஒவ்வொரு விடயத்திற்குமான மொத்தப் புள்ளிகள் 100 ஆவதுடன், ஒவ்வொரு விடயத்திலும் சித்தி எய்துவதற்கான ஆகக் குறைந்த புள்ளிகள் 40 ஆகும். (எழுத்துப் பரீட்சைக்கான 75 புள்ளிகளில் 30 புள்ளிகளையும், வாய்மூலப் பரீட்சைக்கான 25 புள்ளிகளில் 10 புள்ளிகளையும் பெறுதல் அவசியமாகும்.)

(இ) இப்பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் இடம்பெறும்.

(ஈ) இப்பரீட்சைக்குரிய பாடங்கள் 4 ஆகும். ஒரு தடவையோ அல்லது பல தடவைகளில் தோற்ற முடியும்.

3. **வினாத்தாள்களும் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஏற்புடைய பாடங்கள் :**

***முதலாம் வினாத்தாள்*** *(03 மணி)*

(I) *நிதிப் பிரமாணங்கள் - (பாட இல. 01)*

(i) திரட்டு நிதியம்

(ii) வரவு செலவுத்திட்ட வகைப்படுத்தல் பிரிவு

(iii) மீண்டுவரும் செலவினம், மூலதன செலவினம்

(iv) வீரமன் செயல் முறைமை

(v) பிரதான கணக்கீட்டு அலுவலர்களின் மேற்பார்வை

(vi) கணக்கீட்டு அலுவலர்களும் அரச வருமானம் பற்றிய கணக்கீட்டு அலுவலர்களும்

(vii) பிரதான கணக்கீட்டு அலுவலர்களின் பொறுப்புகள்

(viii) அரச வருமானம் பற்றிய கணக்கீட்டு அலுவலர்களின் கடமைகளும் பொறுப்புகளும்

(ix) திறைசேரி மேற்பார்வையும் கட்டுப்பாடும்

(x) திணைக்களம் என்ற வகையில் திறைசேரியின் நிறைவேற்றுச் செயற்பாடுகள்

(xi) உள்ளக கணக்காய்வு

(xii) நிதிக் கட்டுப்பாடு சம்பந்தப்பட்ட கருமங்களைப் பொறுப் பித்தல் (அ. செலவினம் - ஆ. வருமானம்)

(xiii) கணக்காய்வு வினவல்

(xiv) கொடுப்பனவுச் செயல்முறைகள்

(xv) பண்ட ஆய்வு சபை

(xvi) வழங்கல் மற்றும் சேவைகொள்ளல் செயல்பாடுகள்

(xvii) முற்பணம்

*இரண்டாம் வினாத்தாள் (03 மணி)*

(II) *தாபனக் கோவையும் அலுவலக முறைமையும் (பாட இல. 02)*

தாபனக் கோவையின் (I), (II) ஆம் பாகங்களிலுள்ள விடயங்கள், அலுவலக முறைமை மற்றும் துறைகள் சம்பந்தப்பட்ட ஒழுங்கமைப்பு முறைகள் பற்றிய அறிவைப் பரிசீலிக்கும் வினாத்தாள் ஒன்றாகும்.

*மூன்றாவது வினாத்தாள் (03 மணி)*

(III) *சட்டமும் முகாமைத்துவமும் - (பாட இல. 03)*

*சட்டம்*

சட்டம் பற்றிய பொருள்கோடல்
இலங்கைச் சட்ட அமைப்பு
இலங்கை நீதிமன்ற அமைப்பு
கம்பனிகள் பதிவு
வர்த்தகப் பெயர்கள் பதிவு
பேற்றன் சான்றிதழ்
வருமானவரி
தொழிலாளர் சட்டங்கள்
சூழல் சட்டங்கள்
நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
ஊழியர் சேமலாப நிதியமும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமும்
உள்ளூராட்சி மன்றங்களினால் அமுல் செய்யப்படும் சட்டங்கள்

*முகாமைத்துவம்*

முகாமைத்துவம் பற்றிய அறிமுகம்
முகாமையாளரின் கடமைகளும் திறமையும்
திட்ட ஆக்க நடவடிக்கைகளும் ஒழுங்கமைப்பு மட்டங்கள் அமைப்பு முறையும்
ஒழுங்கமைப்பு உள்ளடக்கம்
செயற் சாதனை மதிப்பீடு
உந்து சக்தி
தலைமைத்துவம்
தொடர்பு சாதனங்கள்
தீர்மானம் எடுத்தல்
பயன்பாடும் பயன்பாட்டு முறைகளும்
முகாமைத்துவ கோட்பாடுகளும் பொறுப்புகளும்
வங்கி முறைமை
காப்புறுதி

(மேற்காண் விடயங்கள் பற்றிய துறைகளிலுள்ள அறிவை சாதாரணமாக மதிப்பீடு செய்வதற்கான அளவுகோலாக அமையும் வினாத்தாள்)

*நான்காவது வினாத்தாள்*

(IV) *ஆங்கிலம் - (பாட இல. – 04)*

(அ) எழுத்துப் பரீட்சை
(ஆ) வாய்மூலப் பரீட்சை

**4. விண்ணப்பிக்கும் முறை.**- (அ) இவ் அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கமைய விண்ணப்பப் பத்திரங்களை ஏ 4 அளவு தாளில் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தில் தலைப்பு (1) முதல் (3) வரை முதற் பக்கத்திலும் மீதியை 2 ஆம் பக்கத்திலும் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். பூரணப்படுத்தும் தகவல்களை தமது சொந்தக் கையெழுத்திலேயே தெளிவாக நிரப்புதல் வேண்டும். மேலும் பூரணப்படுத்திய விண்ணப்பப்பத்திரம் பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறல்லாத விண்ணப்பப்பத்திரங்களும் பூரண தகவல்களை வழங்காத விண்ணப்பப்பத்திரங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்பத்திரத்தின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்முடன் வைத்திருத்தல் உசிதமாகும். விண்ணப்பப்பத்திரங்களைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்பத்திரங்களில் சிங்களத்துடன் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்பத்திரங்களில் தமிழுடன் ஆங்கிலத்திலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) பரீட்சைக்கான விண்ணப்பப்பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் 2008.03.24 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் :-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
(ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை)
பெலவத்தை, பத்தரமுல்லை.

(இ) விண்ணப்பத்தை வைத்தனுப்பும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி அலுவலர்களின் முதலாவது வினைத்திறன் காண் தடைநிலைப் பரீட்சை" எனத் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் பொறுப்பேற்கப்படமாட்டாது. விண்ணப்பப்பத்திரத்தின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்முடன் வைத்திருத்தல் உசிதமாகும்.

(ஈ) விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமை தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டதும் உடனடியாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் செய்தித் தாள்கள் மூலம் அறிவிக்கப்படும். அவ்வாறான அறிவித்தல் குறித்து அறிந்து கொள்வதில் விழிப்பாக இருத்தல் வேண்டும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரர்கள் அறிவித்தலின் பிரகாரம் அது குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியத்தருதல் வேண்டும். உங்களுடன் வைத்துக்கொண்ட விண்ணப்பப்பத்திரத்தின் பிரதி மற்றும் பணம் செலுத்திய பணப் பற்றுச்சீட்டு என்பவற்றின் அத்தாட்சிப்படுத்திய நிழற்படப் பிரதிகள், பதிவுத் தபால் பற்றுச்சீட்டு, கொழும்புக்கு வெளியே எனின் அனுமதி அட்டையை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்கள் கோரிக்கைக் கடிதத்தை உங்களுடன் வைத்துக்கொண்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறியத் தருதல் உசிதமாகும்.

"பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், (ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை), பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பின்வரும் விபரங்களுடன் அறியத் தருதல் வேண்டும். (தந்தி மூலமெனின் "பரீட்சைகள், பெலவத்தை, பத்தரமுல்லை" என்று முகவரி இடவும்) :-

(அ) பரீட்சையின் பெயர் ;
(ஆ) விண்ணப்பதாரரின் முழுப் பெயர் ;
(இ) முகவரி ;
(ஈ) விண்ணப்பத்தை தபாலில் அனுப்பிய திகதி ;
(உ) பதிவுத் தபால் மூலம் அனுப்பிய தபால் நிலையமும் பதிவு இலக்கமும்.

5. **பரீட்சைக்குத் தோற்றுதல்.**- (அ) விண்ணப்பங்களை அனுப்பிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரர்கள் தமக்கு வழங்கப்பட்ட பரீட்சை மண்டபங்களில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளருக்கு கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்க முடியாத பரீட்சார்த்தி களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. பரீட்சார்த்திகள் பின்பற்ற வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும் வர்த்தமானியில் உள்ளடக்கும்.

**குறிப்பு.**- பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது பரீட்சைக்குத் தோற்றுவதற்கான எல்லாத் தகைமைகளையும் அவர் பெற்றுள்ளார் எனக் கருதுதல் ஆகாது. பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்படும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் உட்பட்டவர்களாவர். அவ்வாறான சட்ட ஒழுங்குவிதிகளை மீறின் பரீட்சை ஆணையாளரினால் வழங்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும்.

(ஆ) **பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்.**- தான் தோற்றும் அனைத்து விடயங்கள் தொடர்பாக பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடியவாறு எல்லாப் பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும் :

(i) தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் பிரயாணக் கடவுச்சீட்டு.

எஸ். விரித்தமுல்ல,
செயலாளர்,
இளைஞர் அலுவல்கள் அமைச்சு.

இளைஞர் அலுவல்கள் அமைச்சு,
பௌத்தாலோக மாவத்த,
கொழும்பு 7,
2008.02.06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**இளைஞர் அலுவல்கள் அமைச்சு**
**சிறு வியாபார முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவு**

முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி அலுவலர்களுக்கான
முதலாவது வினைத்திறன்காண் தடைநிலைப் பரீட்சை – 2007

1st Efficiency Bar Examination for Enterpreneurship
Development Training Officers – 2007

பரீட்சைக்குத் தோன்றும் மொழி :
சிங்களம் - 2/தமிழ் - 3
(பொருத்தமான இலக்கத்தைக் கூட்டில் இடவும்)

1. பெயர் :-----.
   1.1 முதலெழுத்துக்களுடன் இறுதியில் இடம்பெறும் பெயர் : -----.
   (ஆங்கில தனி எழுத்துக்களில்) உ+ம் : SILVA, G.A.

   1.2 முழுப் பெயர் :-----.
   (ஆங்கில தனி எழுத்துக்களில்)

   1.3 முழுப் பெயர் :-----.
   (தமிழில்)

   1.4 தேசிய அடையாள அட்டை இல. :-

   1.5 பெண்/ஆண் :-----.
   (பெண் - 1, ஆண் - 0)
   (பொருத்தமான இலக்கத்தைக் கூட்டில் இடவும்)

2.
   2.1 அலுவலக முகவரி :-----.
   (ஆங்கில தனி எழுத்துக்களில்)

   (இம் முகவரிக்கு அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்)
   நிரந்தர முகவரி :-----.
   (தமிழில்)

3. பரீட்சைக்குத் தோற்றும் விடயங்கள் :

   1. .................................................. பாட இலக்கம்
   2. .................................................. பாட இலக்கம்
   3. .................................................. பாட இலக்கம்
   4. .................................................. பாட இலக்கம்

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என உறுதிமொழிகிறேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் சட்ட ஒழுங்குவிதிகளுக்குக் கீழ்படிவதாகவும் உறுதிமொழிகிறேன்.

.........................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

**நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பத்தை அனுப்பும் திரு./ திருமதி/ செல்வி .................................................................................... எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் அவரால் தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும் சொல்லப்பட்ட வினைத்திறன்காண் தடைநிலைப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவர் தகைமையுடையவர் எனவும் சான்றுப்படுத்துகிறேன்.

..................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

2-565

---

**தொழில்சார் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு**

தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்

**காலி தொழில்நுட்பக் கல்லூரி (தொழில்நுட்பவியல் கல்லூரி) யில் நடாத்தப்படும் தேசிய தொழில்சார் தகைமை டிப்ளோமா பயிற்சி நெறிகளுக்கு (N. V. Q.) மட்டம் 05 & 06 மாணவர்களை அனுமதித்தல்-2008**

இலங்கை வர்த்தமானி அறிவித்தலின்படி காலி தொழில்நுட்பக் கல்லூரிக்கு தொழிற்தகைமை பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் அவரது தகைமைகள் திறமைகளுக்கேற்பவும் கற்கைநெறிக்குத் தேவையான எண்ணிக்கைகளுக்கேற்பவும் தெரிவுசெய்யப்படுவர்.

2. விண்ணப்பதாரிகள் மாதிரி விண்ணப்பத்திற்கமைய 13" x 8" அளவிலான தாளில் விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள். மாதிரி விண்ணப்பப்படிவத்தில் பகுதி 13 இல் கூறப்பட்டதற்கு இணங்க ஒவ்வொரு

விண்ணப்பப்படிவத்திலும் ரூபா 10 முத்திரை ஒட்டப்பட்டு அதன்மேல் விண்ணப்பதாரர் தனது கையொப்பம் இடுவதன் மூலம் பெறுமதி நீக்கம் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2008.03.05 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் அதிபர், காலி தொழில்நுட்பக் கல்லூரி (தொழில்நுட்பவியல் கல்லூரி), களுவல்ல, காலி என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

3. குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. தொழில்நுட்பக் கல்லூரிகளில் கற்கைநெறிகளைத் தொடர்வதற்கு அனுமதி கோரும் விண்ணப்பதாரிகள்-

(1) நற்பண்புகள் உடையவராக இருத்தல் வேண்டும்.
(2) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(3) விண்ணப்பம் சமர்ப்பிக்கும்போதே அனுமதிக்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

5. தகுதியான விண்ணப்பதாரிகள் தெரிவுப் பரீட்சை, உளச்சார்புப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை என்பவற்றின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் எந்த ஒரு ஆவணங்களையோ பிரதிகளையோ இணைத்தலாகாது. உரிய ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. முழுநேரக் கற்கைநெறிகளைத் தொடரும் மாணவர்களுக்கு தமது குடும்பப் பொருளாதார நிலைமைக்கேற்ப, வரவின் அடிப்படையில் கல்லூரி வகுப்புக்களுக்குச் சமூகமளிக்கும் நாளொன்றுக்கு ரூபா 20 வீதம் மாதமொன்றிற்கு ரூபா 450 வழங்கப்படும்.

முழுநேரக் கற்கைநெறிகளைத் தொடரும் குறைந்த வருமானம் பெறும் மாணவர்களுக்கு தமது குடும்பப் பொருளாதார நிலைமைக்கேற்ப வருடமொன்றிற்கு ரூபா 2,500 வழங்கப்படும்.

8. சகல ஆவணங்களின் நம்பகத்தன்மைக்கு விண்ணப்பதாரியே முழுப்பொறுப்புடையவராவார். மாற்றம் செய்யப்பட்ட அல்லது பொய்யான அல்லது உண்மை உறுதி செய்யத் தவறும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர்.

டாக்டர் எச். எல். ஒபயசேகர,
பணிப்பாளர் நாயகம்.

தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்,
த. பெ. இல. 557,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

**காலி தொழில்நுட்பக் கல்லூரி (தொழில்நுட்பவியல் கல்லூரி) யில் நடாத்தப்படும் கற்கை நெறிகளின் விபரங்கள் - 2008**

| குறியீட்டு எண் | கற்கைநெறியின் பெயரும் இயல்பும் | இலக்கம் | அனுமதிக்காக தேவைப்படும் தகைமைகள் |
|---|---|---|---|
| C. O. T/ Mech 5 & 6 | பொறியியக்கவியல் தேசிய தொழிற் தகைமை யிலான பயிற்சி (NVQ) | 01 | விண்ணப்பதாரிகள் கீழ் குறிப்பிட்ட தேசிய தொழிற்தகைமையிலான பயிற்சி (NVQ) மட்டம் சான்றிதழை கைத்தொழில் பயிற்சி நிறுவனத்தினூடாகப் பெற்றிருத்தல் (R. P. L.) |
| | முழு நேரம் : 2 வருடம் | | (i) பொறியியக்கவியலாளர் NVQ மட்டம் 03 அல்லது உயர்மட்டம் அல்லது |
| | மொழிமூலம் : ஆங்கிலம் | | (ii) NVQ மட்டம் 03 மின்னியலாளர் அல்லது உயர்மட்டம் அல்லது |
| | | | (iii) NVQ மட்டம் 03 வானொலி தொலைக்காட்சி திருத்துனர் அல்லது |
| | | | (iv) NVQ மட்டம் உபகரண வடிவமைப்பாளர் அல்லது உயர்மட்டம் அல்லது |
| | | | (v) NVQ மட்டம் 03 வாயு இயக்க தொழில்நுட்பவியலாளர் அல்லது உயர்மட்டம் |
| | | | (vi) NVQ மட்டம் 03 தேயிலை தொழிற்சாலை இயந்திர திருத்துனர் அல்லது உயர்மட்டம் அல்லது |
| | | 02 | குறித்த துறையில் N. V. Q. சான்றிதழ் கற்கைநெறியை முடித்த பின்னர் குறித்த துறையில் ஒரு வருட பயிற்சி அனுபவம் |

**குறிப்பு**.– பயிற்சிக்கு தகுதிபெற்ற விண்ணப்பதாரிகள் பூரண அனுமதி தகைமை பெறுவதற்கு பின்வரும் பரீட்சைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும் :–

1. தெரிவுப் பரீட்சையில் சித்தி ;
2. உளச்சார்பு பரீட்சையில் சித்தி ;
3. நேர்முகப் பரீட்சையில் சித்தி.

**குறிப்பு**.– தெரிவுப் பரீட்சை கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கொண்டிருக்கும். ஆனால் க. பொ. த. சாதாரண தர பரீட்சையில் கணிதத்தில் திறமைச் சித்தியும் விஞ்ஞானம்/ஆங்கிலத்தில் சித்தியும் பெற்றிருப்பின் தெரிவுப் பரீட்சையிலிருந்து விலக்களிக்கப்படும். நேர்முகப் பரீட்சையும் உளச்சார்பு பரீட்சையும் சகல பரீட்சார்த்திக்கும் கட்டாயமானதாகும்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காலி தொழில்நுட்பக் கல்லூரி (தொழில்நுட்பவியல் கல்லூரி)யில் அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் – கழகவாண்டு 2008**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

(விண்ணப்பங்கள் "அதிபர், காலி தொழில்நுட்பக் கல்லூரி (தொழில்நுட்பவியல் கல்லூரி), கலமுல்ல, காலி" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.)

1. தொழில்நுட்பக் கல்லூரியின் பெயர் :----.

2. கற்றைநெறியின் பெயர் :----.

3. போதனா மொழி :----.

4. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர் :----.

5. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :----.

6. நிரந்தர முகவரி :----. தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இல. :----.

7. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

8. மாவட்டம் :----. தேர்தல் தொகுதி :----.
கிராம அலுவலர் பிரிவு :----.

9. பிறந்த திகதி :----.

   2008.01.01 ஆந் திகதியன்று வயது :----.

   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

   ஆண்/பெண் :----.

10. அனுமதி பெறுவதற்கான தகைமைகள் (வர்த்தமானிக்கமைய) :----.

| தகைமை சுட்டிலக்கம் | சான்றிதழ்களின் விபரங்கள் | N. V. Q. மட்டம் (தேவையானால்) | கல்வி நிலையங்களினால் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் பெயர்கள் | அனுபவம் (இருப்பின்) பற்றிய விபரங்கள் | காலம் (வருடங்கள்/ மாதங்கள்) |
|---|---|---|---|---|---|
| 01 | | | | | |
| 02 | | | | | |

11. வேறு மேலதிக தகைமைகள் அல்லது சான்றிதழ்கள் இருப்பின் அவற்றின் விபரங்களைக் குறிப்பிடவும் :
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

12. கல்வித் தகைமைகள் :----.
க. பொ. த. (சா. த.), க. பொ. த. (உ. த.) பெறுபேறுகள் :

| சுட்டிலக்கம் | வருடம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| | | | |

13. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**
இப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு உட்பட்ட வரையில் உண்மையானவை என்றும் விண்ணப்பித்துள்ள பயிற்சிநெறிக்கு வேண்டிய தகைமைகள் எனக்கு உண்டு என்றும் இத்தால் உறுதிமொழிகின்றேன். மேலும் தொழில்நுட்பக் கல்லூரிக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் திட்டத்திற்கு இணங்குவேன் என்றும் தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினது முடிவே இறுதியானது எனவும் ஏற்றுக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10 ரூபா பெறுமதியான முத்திரையை ஒட்டி அதன்மேல் கையொப்பமிட்டு பெறுமதி நீக்கம் செய்யவும்.

2-661

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.